அன்னாரது மறைவால் அவரை இழந்து வாடும் அவரது குடும்பத்தினருக்கு இப்பேரவை ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தினையும் தெரிவித்துக்கொள்கிறது.

(ஈ) திரு. டி.எம். காளியண்ணன், இந்திய அரசியல் நிர்ணய சபை உறுப்பினர் மற்றும் முதல் மூன்று சட்டமன்றப் பேரவைகளின் உறுப்பினர் அவர்கள் மறைவு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியின் முதுபெரும் தலைவரும், முதலாவது சட்டமன்றப் பேரவையின் உறுப்பினருமான திரு. டி.எம். காளியண்ணன் அவர்கள் 28–5–2021 அன்று, தனது 101–வது அகவையில் மறைவுற்ற செய்தி அறிந்து இப்பேரவை அதிர்ச்சியும், ஆற்றொணாத் துயரமும் கொள்கிறது.

தனது கல்லூரிப் பருவத்து முதலே, இந்திய சுதந்திரப் போராட்டத்தில் தீவிரமாக ஈடுபட்ட திரு. டி.எம். காளியண்ணன் அவர்கள், தேசத் தந்தை மகாத்மா காந்தி அவர்களின் கொள்கைகளால் ஈர்க்கப்பட்டு, தன்னை ஒரு காந்தியவாதியாக மாற்றிக் கொண்டு, எளிமையின் இலக்கணமாக இறுதிவரை வாழ்ந்தவர்.

முற்பகல் 10–10

1950–1952 ஆம் ஆண்டுகளில் இந்திய அரசியல் நிர்ணய சபை உறுப்பினராகவும், 1952–1957 ஆம் ஆண்டுகளில் இராசிபுரம் தொகுதியிலிருந்தும், 1957–1962 மற்றும் 1962–1967 ஆம் ஆண்டுகளில் திருச்செங்கோடு தொகுதியிலிருந்தும் முதல், இரண்டு மற்றும் மூன்றாவது தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு சிறப்பாகப் பணியாற்றினார்கள். மேலும், 1968–1974 ஆம் ஆண்டுகளில் தமிழ்நாடு சட்டமன்ற மேலவை உறுப்பினராகவும் திறம்படப் பணியாற்றினார்கள்.

அன்னாரது மறைவால் அவரை இழந்து வாடும் அவரது குடும்பத்தினர் உள்ளிட்ட அனைவருக்கும் இப்பேரவை ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக்கொள்கிறது.